**செய்தி வெளியீடு எண்: 060** **நாள்: 22.01.2018**

செயலர், மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம், சென்னை அவர்கள் இச்சங்கத்தில் காலியாக உள்ள கீழ்கண்ட பதவிகள் ஒப்பந்த அடிப்படையில் (முற்றிலும் தற்காலிக பணியிடம்) நிரப்பப்பட உள்ளதால், அதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்படும் அலுவலர்கள் மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கத்தில் முற்றிலுமாக தற்காலிக தொகுப்பூதிய ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படுவார். இவர் அரசுப் பணிக்கு தேர்ந்தெடுக்கப்படவில்லை எனவும் அறிவிக்கப்படுகிறது.

**தொகுப்பூதியம் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படவுள்ள காலிப்பணியிடங்களின் விவரம்.**

1. திட்ட அலுவலர் (Programme Officer) – 1 பணியிடம் (தொகுப்பூதியம் ரூ.26, 250/– ஒரு மாதத்திற்கு).

2. உதவியாளர் மற்றும் கணினி இயக்குபவர் (Assistant cum Data Entry Operator) – 1 பணியிடம் (தொகுப்பூதியம் ரூ, 10,000/– ஒரு மாதத்திற்கு)

**கல்வித் தகுதி, அனுபவம் மற்றும் வயது:**

**1. திட்ட அலுவலர் (Programme Officer) (1 பணியிடம்)**

**அடிப்படை கல்வி தகுதி –**பட்டதாரி/முதுநிலை பட்டதாரி (10+2+3 முறையில் கல்வி பயின்றவர்கள்)

**முன்னுரிமை**–குற்றவியல் / கல்வியியல் / குழந்தை வளர்ச்சி / உளவியல் / சமூகப்பணி / சமூகவியல்களில் பட்டம் பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**பணி அனுபவம் –**தொழிலாளர் நலன், கல்வி, சமூகநலம், குழந்தைநலம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றில் மூன்று வருடம் பணிபுரிந்த அனுபவம் வேண்டும்.

**வயது வரம்பு :** 40 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**ஓய்வு பெற்றவர்கள்**

- கள அளவில் புதிய திட்டங்களை வகுப்பதில் பங்குபெற்ற அரசிதழ் பதிவுப்பெற்ற அலுவலர் நிலையில் பணிபுரிந்த அனுபவம் மிக்க ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் விண்ணப்பிக்கலாம்.
- அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் நிகழ்வில் **62 வயதிற்கு மிகாமல் இருக்கவேண்டும்.** இந்நிகழ்வில் தனியர் அதிகபட்சமாக 62 வயதினை நிறைவு செய்யும் வரை மட்டுமே தற்காலிகமாக பணியாற்ற இயலும்.

**2. உதவியாளர் மற்றும் கணினி இயக்குபவர் (Assistant cum Data Entry Operator) (1 பணியிடம்)**

**அடிப்படை கல்வி தகுதி –** பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் கணினி கல்வியில் பட்டயப் பயிற்சி தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**பணி அனுபவம் –** கணினி இயக்குவதில் ஒரு வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
**வயது வரம்பு :** 40 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உரிய விண்ணப்பங்கள் http://www.tn.gov.in/department/30 அல்லது http://www.tn.gov.in/job_opportunity ஆகிய அதிகாரப்பூர்வ இணையதளங்களிலிருந்து பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம்.

மேற்கண்ட பதவிகளுக்கான தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் உரிய படிவத்தில் 06.02.2018 மாலை 5.30 மணிக்குள் கீழ்கண்ட முகவரியில் வந்து சேரும் வகையில் அனுப்பப்பட வேண்டும். மேற்குறிப்பிட்ட தேதிக்குப் பின்வரும் விண்ணப்பங்களும் மற்றும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் தகவலின்றி நிராகரிக்கப்படும்.

ஆணையர் / செயலாளர்,
மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம்,
சமூகப் பாதுகாப்புத் துறை,
எண். 300, புரசைவாக்கம் நெடுஞ்சாலை,
கெல்லிஸ், சென்னை–10
தொலைபேசி : 044–26421358

.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**